Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 22 ஆம் நாள் ஷவ்வால் 16 (4-4-61) செவ்வாய்க்கிழமை இதழ் 45

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

# 3 ஆயிரம் வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

## அலுவல்கள் தடைபடாமல் இருக்க நிர்வாகிகள் ஏற்பாடு

கொழும்பு, செவ்வாய்

**வங்கி ஊழியர்கள் 3000 பேர் நேற்று நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது**

**வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த போதிலும் வங்கிகளில் மாமூல் அலுவல்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.**

நேற்று நள்ளிரவு நாடு பூராவிலும் உள்ள வங்கிகளில் தொழில் பார்க்கும் சுமார் 3000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்கள்.

அரசாங்க வங்கி ஊழியர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வங்கி ஊழியர்கள் கூட்டத்தில் வேலை நிறுத்தம் செய்வதென்ற முடிவு செய்யப்பட்டது. வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதின் காரணங்கள் மேற்படி கூட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டன, அதன் பின்னரே வேலை நிறுத்தம் செய்வதற்கான முடிவு செய்யப்பட்டது.

சம்பள உயர்வு, இளைப்பாறுவதற்குமுன் மூன்று மாத லீவு, பென்ஷன் பஞ்சப்படி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வங்கிகளில் வேலை நிறுத்தம் நடைபெற்ற போதிலும், வங்கிகளின் மாமூலான அலுவல்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை வங்கி நிர்வாகிகள் செய்வதாகத் தெரிகிறது.

வங்கிகளிலிருந்து பொது மக்கள் குறைந்த அளவு பணம்மட்டும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று வங்கி நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

புதிய தொழில் அதிபர் அபயவீர வங்கி ஊழியர்கள் சங்கத்துடன் நேற்று பேச்சு வார்த்தைகள் நடத்தினர். வேலை நிறுத்தத்தைக் கைவிடச் செய்வதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோதிலும் ஆர்ப்பாட்டங்களிலும், மறியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார்களென்று தெரிகிறது.

## 'காந்தியின் வழியில் நின்று இழந்த உரிமைகளைப் பெறுவோம்'

### வவுனியா எம். பி. பேச்சு

தண்ணீரூற்று, ஞாயிறு

'தமிழ் பேசும் மக்களை, சிறுபான்மையினர் என்ற காரணத்தால் அடிமைகள் போல் அடக்கி ஆள அரசாங்கம் எண்ணுகிறது. தமிழ் இனம், ஒரு போதும் அடிமைகளாக வாழ இணங்காது. காந்தி அண்ணல்காட்டிச் சென்ற அகிம்சா முறையில் தமிழ்ப் பேசும் மக்களாகிய நாம் இழந்து போன உரிமைகளை மீண்டும் பெற வேண்டும்' என்று வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் வவுனியாக் கச்சேரி முன் சத்தியாக்கிரகம் செய்வதற்காக ஊர்வலமாக வந்த செட்டிகுளம் மக்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

வவுனியாவில் சத்தியாக்கிரகம் தொடங்கி இன்றுடன் 14 நாட்களாகின்றன. தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் 5 கச்சேரிகளிலும் காரியாலயங்களிலும் மறியல் விஸ்தரிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆட்சியாளர்கள் எங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய நேரத்திலே, எங்கள் போராட்டத்தை எங்ஙனம் முறியடிக்கலாம் என்று சிந்திப்பதிலேயே காலம் கடத்துகின்றதை எணணும்போது, இந்த நாட்டிலே ஜனநாயகம் நடைபெறுகின்றதா? என்ற ஐயம் எழுகின்றது.

எங்கள் உரிமை கிடைக்கும் வரை தமிழ் பேசும் மக்களாய நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, கட்டுப்பாட்டோடு சத்தியாக்கிரகத்தை தொடர்ந்து நடத்த வேண்டும்.

## அரசாங்கத்துக்கு திறமையில்லை

### டாக்டர் பெரேரா கருத்து

அநுராதபுரம், ஞாயிறு

"நாடு இன்றைய பரிதாபகரமான நிலைக்கு வந்திருப்பது ஆதிக்கத்திலுள்ள அரசாங்கத்தின் திறமையின்மையைத் தெளிவாகக் காட்டுகிறது" என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கட்சியின் வாலிபர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அநுராதபுரம் மத்திய கல்லூரி மண்டபத்தில் செனட்டர் சந்திரா குணசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாட்டின் நிதிநிலைமை மிக மோசமாக உள்ளதென்று டாக்டர் பெரேரா கூறினர்.

சமசமாஜக் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை சமசமாஜக்கட்சி கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லையென்றும் மிகவும் கவனமாக அவதானித்துக்கொண்டுதான் ஆதரவளித்து வருவதாகவும் கூறினர்.

## பிரதமருக்கு உடுப்பிட்டி தொண்டர்கள் செய்தி

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டித் தொண்டர்களால் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மூலம் இலங்கைப் பிரதமருக்கு வருகிற சனிக்கிழமை ஓர் செய்தி அனுப்பிவைக்கப்படும். தமிழுரிமைப் போராட்டத்தின் நோக்கங்கள் கோரிக்கைகளையும் பிரதிபலிக்கும் அம்சங்கள் அச்செய்தியில் இடம்பெறும் எனத் தெரிகிறது.

மேற்படி செய்தியை அஞ்சல் ஓட்டமூலம் பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டித் தொண்டர்கள் திரு. செல்வநாயகத்திடம் சமர்ப்பிப்பார்கள். சனிக்கிழமை காலை அஞ்சல் ஓட்டம் ஆரம்பமாகி பிற்பகலில் யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

## கவர்னர்-ஜெனரலுடன் பிரதமர் சிறிமா ஆலோசனை

### வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரிசி விநியோக பிரச்சினை

கொழும்பு, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கம் பற்றி ஆலோசிப்பதற்காக நாளை செவ்வாய்க்கிழமை காலையில் அரசாங்க பார்லிமெண்ட் குழு கூடுகிறது.

சத்தியாக்கிரகத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிலைமை குறித்தும், லண்டனிலிருந்து தாம் திரும்பியபின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் பிரதம மந்திரி அரசாங்கக்கட்சி எம். பி. க்களுக்கு விளக்கிக் கூறுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியாயமான அளவு தமிழ் உபயோகம் பற்றி தமிழர் சார்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்களைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமானால், சத்தியாக்கிரகம் கைவிடப்படவேண்டும் என்ற தமது கருத்தை பிரதமர் மீண்டும் வலியுறுத்துவார் என்று அரசாங்கக்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அரசாங்கக்கட்சியின் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகத்தைக் கைவிடாதவரை பேச்சு வார்த்தைகள் நடத்தக் கூடாது என்ற கருத்தையே கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கடந்தவார இறுதியில் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமையைப் பற்றியும், அவைகளைச் சமாளிப்பதற்கான வழிகள் பற்றியும் தமது சக மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் வின்ஸ்டன் விஜயக்கூன், பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ், அட்டோர்னி ஜெனரல், டாக்ளஸ் ஜான்ஸ், தற்காலிக சட்ட அமைப்பாளர் பேர்னி டி' சில்வா, ஆகியவர்களும் பிரதம மந்திரி நடத்திய மகாநாடுகளில் கலந்து கொண்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க இலாகாக்களின் நிர்வாக அறிக்கைகள்

### இனித் தமிழில் இல்லை !

கொழும்பு, திங்கள்

அரசாங்க இலாகாக்களின் வருடாந்த நிர்வாக அறிக்கைகள் இனிமேல் உத்தியோக மொழியான சிங்களத்தில் பிரசுரிக்கப்படல்வேண்டுமென்றும் அதனுடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இருக்கவேண்டுமென்றும் அரசாங்க இலாகாக்களின் தலைவர்களுக்கு திறைசேரிக் காரியதரிசி அனுப்பியுள்ள ஒரு நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

நீதிமந்திரியின் உத்தரவின் மீதே திறை சேரிக்காரியதரிசி இந்த நிருபத்தை அனுப்பியுள்ளார்.

இதுவரை அரசாங்க இலாகாக்களின் நிர்வாக அறிக்கைகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டு வந்தன.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்த காலத்திலேயே அரசாங்க இலாக்காக்களின் வருடாந்த அறிக்கைகள் தமிழிலும் வெளியிடப்பெற்று வந்தனவென்று திறைசேரியைச்சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிளில் ஊர்வலமாக வந்த 50 தொண்டர்களை வவுனியா எம். பி. ஓமந்தை என்னுமிடத்தில் வரவேற்று மறியல் நடைபெறும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். முல்லைத் தீவிலிருந்து தொண்டர்கள் பலர் ஊர்வலமாக வந்து மறியலில் கலந்து கொண்டனர்.

## வவுனியா மறியல் இயக்கம்

### முள்ளியவளை கி. ச. தலைவர் தலைமை

வவுனியா, திங்கள்

வவுனியாவில் மறியல் இயக்கம் ஆரம்பமாகி இன்றுடன் 13 வது தினம் முடிவடைகிறது. இன்றைய மறியல் இயக்கத்துக்கு முள்ளியவளை கிராமச்சங்கத்தலைவர் திரு. வெ. அண்ணாமலை தலைமை தாங்குகிறார். பெண் தொண்டர்கள் திருமதி அண்ணாமலை தலைமையில் மறியல் செய்கின்றனர்.

வவுனியா கார் சாரதிகள் சங்கத்தினரும் இன்றைய இயக்கத்தில் கலந்து கொண்டனர். சங்கத்தின் சார்பில் திரு. கே. கே. பண்டா, வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரத்திடம் பணமுடிப்பொன்றை அளித்தார்.

## மந்திரி குணமடைகிறார்

கொழும்பு, திங்கள்

கடுஞ் சுகவீனமுற்றிருந்த தொழில் அமைச்சர் சரத் விஜயசிங்கா குணமடைந்துவருவதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

அவரது உடல் நிலையைப் பரிசோதித்து வைத்தியம் செய்வதற்காக நாளை லண்டனிலிருந்து நரம்பு வியாதிகள் சம்பந்தமான நிபுணர் மக்டொனல்ட் கிரிஸ்டி கொழும்பு வருகிறார்.

## மணிவாக்கு

'உள்ளத்திலுள்ள மாசு நீங்கத்தான் கோவிலுக்குப் போகிறோம். தனக்குள்ளிருக்கும் நற்குணத்தையெல்லாம் திரட்டிக் கொள்வதற்கே பக்தன் கோவிலுக்குச் செல்வது' —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 22 உ (4-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சுதேசி வாரம்

நேற்று ஆரம்பமான சுதேசி வாரத்தின் முக்கிய நோக்கம், இங்கு உற்பத்தியாகும் பொருட்களையே நாம் கூடுமான வரை வாங்கி, ஆதரிக்க வேண்டுமென்பதுதான். இவ்வாரத்தில் மட்டுமல்ல. இனி இவ்வித வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள நாம் இதுபோன்றவிரதம் பூண்டாலே, நாட்டில் கைத் தொழில்கள் பெருகவும் வேலையில்லாக் கஷ்டங்கள் குறைந்து சுபீட்சம் பெருகவும் வழி பிறக்கும்.

ஆனல் இன்று நமது முக்கிய தேவைக்கான உணவு, உடை இவற்றுக்கும் கூட பரதேசங்களையே நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். உணவுக்காக 80 கோடி ரூபாய்கள் இலங்கையிலிருந்து வெளியேறுவது பற்றி சமீபத்தில் எழுதினோம். உடுத்தும் உடைகளுக்கும் பல கோடி ரூபாய்கள் வெளியேறுகின்றன. நாட்டின் பண நிலை மிக மோசமாகியிருப்பதாக, மத்திய வங்கி அறிக்கையும் தெரிவிக்கின்றது. இந்த அவல நிலை மாற வேண்டுமானல் நமக்குத் தேவையான உணவு, உடை முதலியவற்றை இங்கேயே கூடுமானவரை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும்.

பல வருடங்களாக இது பற்றிப் பேசப்படுகின்றது. பெருந்தொகைப் பணமும் உணவு, கைத்தொழில் உற்பத்திக்காகச் செலவழிக்கப்பட்டும் வந்துள்ளது. ஆனல் முன்னேற்றம் தான் மிகக் குறைவு. இங்குள்ள ஆள் பலத்தையும், நிலவளத்தையும் பூரணமாகப் பயன்படுத்தும் படி தக்க திட்டம் அமைத்து, அதின்படி காரியம் செய்திருந்தால், இன்று நிலைமை இவ்வளவு பின் தங்கி இருந்திராது. துரதிருஷ்ட வசமாக இப்போது கூட அரசாங்கம் மொழி முதலிய பயனற்ற விஷயங்களில் பொது மக்களின் கவனத்தைத் திருப்பியுள்ளது. இக்கவனமெல்லாம் சுதேசி இயக்கத்தில் பூரணமாகத் திருப்பினல்தான நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட முடியும். அவ்வித மன மாற்றம் அரசாங்கத்துக்குச் சீக்கிரம் ஏற்பட வேண்டும்.

காலனி ஆட்சியிலே தேயிலை, ரப்பர், கொப்பரா முதலிய வர்த்தக ஏற்றுமதிப் பொருள் உற்பத்தியிலேயே நிலமும், பணமும், ஆள் பலமும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டன. இங்கு நமக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகளே இருந்தன. அரசியல் சுதந்திரம் பெற்று 13 ஆண்டுகளாகியும், அந்த நிலையில் விசேஷ மாறுதல் ஏற்படவில்லை. மலிவான, பகட்டான இறக்குமதிப் பொருள்களை வாங்கிப் பழக்கப்பட்ட மக்கள், அதை மாற்றிக்கொள்வது சுலபமன்று. உள் நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சில கைத்தொழில் பொருட்கள் தரத்திலும், விலையிலும் வெளி நாட்டுச் சரக்குகளுடன் போட்டியிட முடயாததால், தலைதூக்க முடியவில்லை. மேலும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சில சிறு கைத்தொழில்கள், மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்மையால், அபிவிருத்தியடைய முடியாதிருப்பதாக அறிகிறோம். இந்த அவல நிலை மாற வேண்டும். உள் நாட்டுச் சரக்குகள் சற்றே மட்டமாகவும், விலை சற்றே கூடுதலாகவும் இருப்பினும், அவற்றையே ஆதரிக்கவேண்டுமென்று மக்கள் விரதம் பூணவேண்டும். இவ்வித தியாகம் செய்வதின் மூலமே நமது கைத்தொழில்கள் தலைதூக்கி, வேலையில்லாக் கஷ்டம் குறைந்து, நாடும் சுபீட்சமடைய முடியும். மொழிப் பிரச்சினை ஒருபுறமிருப்பினும், தலைவர்கள், சுதேசி இயக்கத்தில் தாங்களே வழிகாட்டி, மக்களை ஊக்கவும் இங்கு பல கைத்தொழில்கள் வளரவும் ஆக்கப் பணிகளில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

# சத்தியாக்கிரகம்பற்றி விசாரணை:
# மகாத்மா காந்தி பதில்

சத்தியாக்கிரகம் சம்பந்தமாக ஹண்டர் பிரபுவின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணைக் கமிட்டி முன்பு, மகாத்மா காந்தி அளித்த சாட்சியங்களில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம். சத்தியாக்கிரகம் பற்றி மகாத்மாவின் உள்ளம் ஓரளவு இதனல் தெளிவாகும்.

கேள்வி:-காந்தியாரே, சத்தியாக்கிரக இயக்கத்தின மூலகர்த்தர் நீங்கள் தான் என நினைக்கிறேன்.

பதில்:- ஆம், ஐயா.

கே:- நீங்கள் அதைச் சுருக்கமாக விளக்கமுடியுமா?

ப:- இம்சையை அடிப்படையாகக் கொண்டமுறைகளுக்கும் பதிலாக முற்றிலும் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் இயக்கம் அது. இந்தியர்கள் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ளவும் அதே சமயம் இந்தியா முழுதும் இம்சை தலைதூக்காமல் தடுக்கவும் இந்த இயக்கம் தான் உதவமுடியும் என்பது எனது அனுபவத்தின் மூலம் நான் கண்ட முடிவு.

கே:- இந்த இயக்கத்தில் முடிந்த அளவு அதிகமான பேர்களைச் சேர்க்க வேண்டுமென்பது உங்கள் நோக்கமா?

ப:- ஆம்.சத்தியம், அஹிம்சை ஆகிய கொள்கைக்கு ஏற்ற முறையில்.

கே:- அரசாங்கத்தின் விருப்பத்துக்குப் பதிலாக சத்தியாக்கிரகக் கமிட்டியின் விருப்பத்தை நீங்கள் புகுத்துகிறீர்கள். ஆகவே இது அரசாங்கத்துக்கு முற்றிலும் எதிரான ஓர் இயக்கமல்லவா?

ப:- மக்கள் இந்த இயக்கத்தை இத்தன்மையில் எடுத்துக்கொள்ளவில்லை.

கே:- அரசாங்கத்தின் கண்ணோட்டத்துடன் இதைப் பார்க்குமாறு உங்களைக் கேட்கிறேன். நீங்கள் ஒரு கவர்னராக இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். பிரஸ்தாப சட்டங்களை மீறும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள ஓர் இயக்கத்தைப்பற்றி நீங்கள் என்ன செய்வீர்கள்?

ப:- சத்தியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இம்சையில் ஈடுபடாது, நியாய விரோதமான சட்டங்களிலிருந்து நிவாரணம் தேடும் ஓர் இயக்கத்தினருடன், நான் அரசாங்கத்தின் பொறுப்பிலிருந்து நேருக்கு நேர் தொடர்பு கொள்ளும்படி நேரிட்டால், நான் அந்த இயக்கத்தை வரவேற்பேன். அவர்கள் தான் சிறந்த அரசியல் அமைப்புவாதிகள் என்று கருதுவேன். என்னைச் சரியான வழியில் நடத்தத் தக்கவர்கள் என்று அவர்களை எனது ஆலோசகர்களாகக் கொள்வேன்.

ஹண்ட் பிரபு:- அரசாங்கம் தொடர்ந்து நடைபெறும் கண்ணோட்டத்துடன் நான் இதைக் கவனிக்கிறேன். தனிப்பட்ட ஒரு கமிட்டியின் பேச்சைக் கேட்டு மக்கள் கூட்டம் கிளம்புவதாக இருந்தால், அரசாங்கம் தொடர்ந்து நடைபெற முடியுமா?

ப:- தென்னுபிரிக்காவில் எட்டு ஆண்டுகளாகப் போராட்டம் நடத்திய எனது அனுபவத்திலிருந்து இது சாத்தியம் என்றே எனக்குத் தெரிகிறது. இந்தப் போராட்ட காலம் முழுதும் பதவி வகித்த தளபதி ஸ்மட்ஸ், அதன் முடிவிலே, "எல்லோரும் சத்தியாக்கிரகிகளைப் போல நடந்து கொள்வதானல் நாம் பயப்படுவதற்கு எதுவுமில்லை" என்று கூறினர்.

கே:- ஒரு கமிட்டி குறிப்பிடும் சட்டங்களை மீறவேண்டுமென்பதே உங்களுடைய பிரதிக்ஞை என்று எண்ணுகிறேன்.

ப:- ஆம் ஐயா, இதை ஒரு மக்கள் இயக்கமாகச் செய்ய நான் விரும்பினேன். ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு விதி வகுத்துக் கொள்ளக்கூடாதென்பதற்காக ஒரு கமிட்டி அவசியம் என்று முடிவு செய்தேன். ஆகவே மீறவேண்டிய சட்டங்களை இக் கமிட்டியே தீர்மானிக்க வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்தோம்.

கே: டாக்டர்களைப்போல், சத்தியாக்கிரகிகளுக்குள்ளும் கருத்து வேற்றுமை ஏற்படலாமல்லவா?

ப-: ஆம். இது என் அனுபவ உண்மை.

கே:- ஒரு குறிப்பிட்ட சட்டம் நியாயமானது என்று ஒரு சத்தியாக்கிரகி கருதுகிறன். ஆனல் சத்தியாக்கிரகக்கமிட்டி அதற்குப் பணிய மறுக்கிறது. அப்போது அந்தச் சத்தியாக்கிரகி என்ன செய்வான்?

ப:- அவன் அந்தச் சட்டத்தை மீறவேண்டுமென்பதில்லை.

கே:- இது ஓர் அபாயமான இயக்கமல்லவா?

ப:- இந்த நாட்டில் இம்சையைப் போக்குவதற்காக எழுந்த ஒரு இயக்கம் என நீங்கள் இதைக் கருதுவீர்களாயின் என்னைப்போன்றே நீங்களும் அக்கறை கொள்வீர்கள். எவ்விதத் தியாகம் செய்தாவது பரிசுத்தமான முறையில் இப்படிப்பட்ட ஓர் இயக்கம் இந் நாட்டில் இருக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

கே:- சட்டத்தை மீறுவதென்பது மிகக்கடுமையான பழியல்லவா?

ப:- இக்கருத்திலிருந்துநான் மாறுபடுகிறேன். என்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமான ஒரு நியதியை எனது தகப்பனரே என்மீது வற்புறுத்துவதாக இருந்தாலும் "அதற்குப் பணிய முடியாது" என்று கூறுவதே மிக இயற்கையான வழியென்று நான் கருதுகிறேன். அவ்வாறுசெய்வதன் மூலம் நான் என் தகப்பனருக்கு நன்மையே செய்கிறேன். என் தகப்பனரிடம் இவ்விதம் கூறுவது அவமரியாதை இல்லை என்ருல், ஒருநண்பரிடம் அவ்வாறுசொல்வதோ அல்லது அதை அரசாங்கத்திடம் கூறுவதோ அவமரியாதை இல்லை என்றே எண்ணுகிறேன்.

## ஐயாறன் எழுதுவது

மாவிட்டபுரத்திலிருந்து சில அன்பர்கள் வந்தனர். வருகிற வெள்ளிக்கிழமை அங்கு கந்தசாமி கோவிலிலே தமிழ்மொழி பாதுகாப்பு வழிபாடு நடைபெறுவதாயும், மாலையிலே அங்கிருந்துபுறப்பட்டு வண்ணை சிவன்கோவில் வந்து, அங்கிருந்து 6 மணிக்கு ஊர்வலமாக கச்சேரியடிக்குச் சென்று அங்கு சத்தியாக்கிரகிகளுக்கு பிரசாதங்களை விநியோகம் செய்வதாயும் ஆர்வத்துடன் தெரிவித்தனர்.

தமிழ் மொழி உரிமைக்காக கோடி அர்ச்சனை ஹோமமும், காமிய சித்தி மகாயாகமும், புங்குடுதீவில் வருகிற வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 5 நாட்கள் வரை நடத்துவதாக அகில இலங்கை குருக்கள்மார் சபையினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இந்த யாகத்தை எங்கே நடத்துவதென்று பல இடங்களைக் குறிப்பிட்டு, திருவுளச்சீட்டு போட்டதில், அதில் கிடைத்த உத்தரவுப்படியே, புங்குடுதீவில் வரசித்தி விநாயகராலய முன்றலில் நடத்துவதாயும், இந்த இடம் அமைந்தது, சத்தியாக்கிரகத்தின் பூரண சித்திக்கு அறிகுறியென்றும், அ இ. குருக்கள்மார் சபையாரும் தமிழ் அபிமானிகளும் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

கோடி அர்ச்சனை ஹோமம் என்பது சாதாரண காரியமல்ல. சமீபத்தில் இப்படி எனக்குத் தெரிந்து நடந்ததில்லை.

இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக்கூட இப்போது பொதுவாக நம்பிக்கை பிறந்திருக்கிறது.

கோவிலாவது கடவுளாவது என்று கூறியவர்களும், இப்போது மனம் மாறி, தெய்வ நம்பிக்கை கொண்டு அதன் அருளைநாட முன்வருவதாகக் கேள்விப்பட்டேன்.

கோணல் வழியிலே செல்லும் நம் மனதை, தம்பால் இழுக்கவே, இறைவன், இன்னல்கள் கொடுத்து மறக்கருணை செய்வது என்றுகூறுவதுண்டு. இந்தமுறையில் பார்க்கையில் தனிச் சிங்களச் சட்டத்துக்கு நம்மில் பலரும் நன்றி செலுத்த வேண்டும். இன்றேல், பிரார்த்தனை, ஹோமம், அர்ச்சனை முதலியன நடத்தவும் ஆண்டவன் பால் நம்மனம் திரும்பவும் செய்யுமா? நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

* * *

"தமிழ் காக்க" என்ற தலைப்புடனே வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தமிழ்ப்பண்டிதர் திரு. வி. நவரத்னம், உணர்ச்சியும் பொருளும் மிக்கபாடல்களை எல்லோரும் சேர்ந்து பாடத்தக்கவகையில் ஆக்கியுள்ளதைஓர்அன்பர் கொண்டு கொடுத்தார். வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள முத்துமாரியம்மை கோவிலில் இப்பாடல்கள் கூட்டுப் பிரார்த்தனையாகப் பலரும் சேர்ந்துபாடி வழிபட்டார்களாம். ஒரு சாம்பிள்:

பாதுகாத்தருள் தாயே பாது
காத்தருள்-பரா
சத்தி முத்துமாரி அம்மை
பாதுகாத்தருள்
வான் தமிழை வையகத்து
பாது...
வாடி நிற்கும் தமிழ் மக்களைப்
பாது...
ஈழத்தமிழ் வாழத்தந்து
பாது...
இணையிலெமைக் குறைபடாது
பாது...

இப்படி 40 பாடல்கள். எல்லாரும் சேர்ந்து வேண்டினல் பலன் இல்லாமலா போகும். திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பது பொய்யாமா!

* * *

யாழ்ப்பாணத்திலே ஒரு கிராமக்கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. நல்ல கூட்டம்! தாய்மார்கள் அதிகம், பக்தியுடன் பலரும் வழிபட்டனர்.

வெளியிலே முன் மண்டபத்தில் பலர் இருந்து கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். அவர்கள் ஹரிஜனங்களென்றும், அவர்கள் இதில் பக்தியுடன் கலந்து கொள்வதாகவும் அன்பர் தெரிவித்தார்.

ஹரிஜனங்கள் அங்கு அவ்வளவு தொகையாக வந்திருந்தது மகிழ்ச்சி அளித்தது. ஆனல் அவர்கள் வெளி மண்டபத்தில் இருக்க நேரிட்டதைப் பார்க்க மனம் மிக வேதனையடைந்தது.

நல்லூர் முருகன், வண்ணை வைத்தீச்வரன், சிதம்பரம் நடராஜா, மதுரை மீனுட்சி இவர்களெல்லாம் ஹரிஜனங்களை அன்புடன் தங்கள் சந்நிதிக்கு வரச்செய்து விட்டனர். இந்த கிராமக் கோவில்களில் தான் இன்னும் மனம் மாறவில்லை.

அன்பே உருவான தெய்வ சந்நிதியிலே,உயர்வு தாழ்வுக்கு இடமளிப்பது சரியா? நாம் சிலரைத்தாழ்வாக மதிப்பதால் நம்மைப்பிறர் தாழ்வாக ஒதுக்குகிருர்கள். எல்லாம் கர்ம பலன் தானே!

விசேஷ வழிபாடுகள் நடத்தும் பக்தர்களும், யாகம் செய்யும் குருக்கள்மாரும் இவ் விஷயத்தில் துணிச்சலுடன் முன்வந்து, தீண்டாமைத் தீமையைப்போக்கும் புண்ணிய கைங்கரியத்தில்ஈடுபடவேண்டுகிறேன். அப்போது தமிழ்ச் சமூகம் ஒற்றுமையாகி பலப்படுவதுடன், பிறரும் நம்மைமதிக்கவும், நமது உரிமைகளும் கிடைக்கவும் இறைவன் அருள் செய்வான்.

## ஆசிரியருக்குகடிதங்கள்

### வெங்காய விவசாயிகள் சங்கடம்

யாழ்ப்பாண கமக்காரர்கள் தாங்கள் அறுவடை செய்த வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாது தவிக்கின்ருர்கள்.

இதுவரை வடபகுதி கூட்டுறவு மொத்த வியாபார சமாஜத்தின்மூலம் ஓரளவு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனல் தற்போது உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய மறுக்கின்றன.

இங்கிலேயில் தனிப்பட்ட வியாபாரிகள் சுலபமாக ஏற்றுமதி செய்து மக்களின் இன்னலை உடனே களைய முடியும். ஆனல் வர்த்தகர்களை "ஆனையிறவுத் தடைமூலம் வெங்காயத்தை அப்பால் கொண்டு செல்ல முடியாதபடி அரசாங்கம் தடுக்கிறது. கூப்பன் அரிசி கிடைக்காது அவதியுறும் ஏழைகளுக்கு இது மேலும் பளுவாக இருக்கின்றது.

ஆகவே வெங்காயத்தைத் துரிதமாக ஏற்றுமதி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வடபகுதி எம். பிக்களும் உடன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நா. மா. கந்தசாமி
பண்டத்தரிப்பு

### பண்ணைத் தாம்போதி

சமீபத்தில் பூர்த்திசெய்யப்பட்ட பண்ணைத் தாம்போதி வீதியிலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் வீதி மிகவும் கேவலமாக வுள்ளது. பிரதான வீதிகளில் ஒன்ருகக் கருதவேண்டிய இது சாதாரண வீதியாகவே காட்சியளிக்கிறது. வீதியின் இரு பக்கமும் மேடும் பள்ளமுமாகவும், உவர் மண் கொட்டப்பட்டும் இருப்பதால் வாகனங்கள் ஒன்றுக்கொன்று விலகிக்கொள்ளும்போது குடைசாயும் ஆபத்து ஏற்படுகிறது.

மழை நீரால் பாதிக்கப்பட்டு இருமருங்கிலும் மேடுபள்ளமாகவுள்ளதால் பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனிப்பார்களா?

என். என். வேலன்
அல்லைப்பிட்டி

# 'பாரததுருப்புகள் கடாங்காவருவது யுத்த பிரகடனம்'

—ஷோம்பே

## இடையூறின்றி துருப்புகள் கடாங்காவுக்குள் பிரவேசித்தனர்

லியப்போல்ட்விலி, ஏப்ரல் 3

இந்தியத் துருப்புக்கள் கடாங்காவுக்கு வருவது கடாங்கா அரசாங்கத்துடன் யுத்தப்பிரகடனம் செய்வதற் கொப்பாகும் என அந்த அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ள அதேசமயம் காமினு விமானத்தளத்தில் பாரத போர்த் துருப்புக்கள் இறங்கிய வண்ணம் இருந்தன. துருப்புக்கள் எவ்வித இடையூறுமின்றி விமானங்களில் கொண்டுசென்று இறக்கப்பட்டன.

காமினுத் தளத்திலிருந்து லொறிகள் மூலம் ஐ. நா. பாரதத் துருப்புக்கள் கட்டாங்காவிலுள்ள இலக்குகளில் பிரவேசித்தவண்ணம் இருக்கின்றன.

பாரத போர்த்துருப்புக்கள லியப்போல்ட்விலியிலிருந்து வடக்கு கட்டாங்காவிலுள்ள காமினு விமானத் தளத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. எலிஸபெத்விலியிலுள்ள அரசாங்கம், பாரதத் துருப்புக்களை அங்கு வரவிடாமல் தடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருப்பதாய்க் கூறப்படுகிறது. காங்கோ துருப்புக்கள் விமானத் தளத்தில் யந்திர பீரங்கிகளுடன் காவல் புரிவதாயும் அறிவிக்கப்படுகிறது.

வடகடாங்காவில் இந்தியத் துருப்புக்கள் பிரவேசிப்பது யுத்தப்பிரகடனத்துக்கு ஒப்பானது என அதிபர் ஷோம்பே எச்சரிக்கை விடுத்துள்ளார். இன்று இதுபற்றி அவர் வானொலி மூலம் ஒரு அறிக்கையை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு எல்லையில் கடாங்கா துருப்புக்கள் முகாமிட்டிருப்பதாயும் கூறப்படுகிறது. நேற்று பாரத கூர்க்கத் துருப்புக்கள் விமானத்தளத்தின் உள்ளே பிரவேசிக்கமுடியாமல் கடாங்கா துருப்புக்கள் தடுத்தன என்றும், ஆனல் பக்கத்து வாசல் வழியால் கூர்க்கர்கள் பிரவேசித்து விட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## லாவோஸ்

### யு. எஸ். பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரிகள் ஆலோசிப்பர்

வாஷிங்டன், ஏப்ரல் 3

பிரிட்டனின் கருத்துக்களை ரஷ்யா ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, லாவோஸ்பற்றி ரஷ்யாவின் கருத்துக்களை மேலும் தெளிவாக்கவேண்டுமென பிரிட்டனும் அமெரிக்காவும் கூட்டாக கேட்டுக்கொள்ளும் என வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.லாவோஸ்பற்றி இனி என்ன செய்வதென்பது சம்பந்தமாய்அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்குடன் ஆலோசிக்கும் பொருட்டு,பிரிட்டிஷ்வெளிநாட்டுமந்திரி ஹோம் பிரபு வாஷிங்டன் செல்கிருர்.

## உலக நாடுகளில்

### அணுஎதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

லண்டன், ஏப்ரல் 3

அணு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் உலகின் பலநாடுகளில் நடைபெற்றன. நியூஜெர்மனியிலிருந்து நியூயோர்க்குக்கும், பிரிட்டனில் எஸ்ஸெக்ஸிலிருந்து லண்டனுக்கும் ஊர்வலங்கள் சென்றன. டென்மார்க் தலைநகரம் கேயன் ஹேராக்ஸிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஐ. நா. தலைமைக்காரியாலயத்துக்குமுன் பிரமாண்டமான கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

## கந்தர்மடம் சனசமூகநிலைய தீர்மானம்

"இனவுரிமைப் போராட்டத்தில் யாழ் வர்த்தகர் எடுத்துவரும் முயற்சிகளில் நம்பிக்கை தெரிவிப்பதாயும் அவர்களது எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து யாழ்ப்பாண வர்த்தக தாபனங்களின் புகுமுக வாயில்களில் தொங்கப்படும் விளம்பரப் பலகைகளில் தமிழ்மொழிக்கு முதலிடம் தரும்படிஎல்லா வர்த்தகப் பிரமுகர்களையும் கேட்டுக் கொள்வதாயும் கந்தர்மட சனசமூக நிலையத்தின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## முஸ்லிம்கள் தமிழ்ப் பேசும் மக்களே

—ஜனுப் மௌலானு

மன்னர், திங்கள்

"இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு ஒரு தனி மொழி இல்லையென்று வாதாடும் சில முஸ்லிம் தலைவர்களின் கூற்றுக்களைக் கேட்டு வருந்துகின்றோம். முஸ்லிம்களின் மொழி அரபு என்பவர்கள் இஸ்லாத்தைப் புரியாதவர்கள் என்று சொல்லுதல் மிகையல்ல. அரபிகள் தாம் இஸ்லாத்தில் இருக்க முடியுமென்பது இஸ்லாத்தின் கோட்பாடல்ல. அப்படிக் கொள்ளப்படுமானல் திரு. நபி அவர்களை உலகம் பொதுக் கண்ணேடு பார்க்க முடியாது" என ஜனுப் எம். கே. ஈ. மௌலானு இஸ்லாமிய அறநோக்குக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

"பத்து அறிவாளிகளையும், பதினெரு மடையர்களையும், கொண்ட ஜனநாயகம் இருபத்தொரு மடையர்களை உண்டாக்கும்" என ஜனுப் ஜின்னு கூறினர். அதை உணர்ந்து தமிழ்ப் பேசும் மக்களாகிய முஸ்லீம்கள், மொழி உரிமையைப் பெற முன்வர வேண்டும்" எனவும் அவர் கூறினர்.

## இந்தியர் செய்திகள்

இந்தியாவின் 3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 4-வது எஃகு ஆலை ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறதென அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த 90 லட்சம் அகதிகளைக் குடியமர்த்தும் வேலை அநேகமாக முடிந்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது. இந்த வேலைகளுக்காக அரசாங்கத்திற்கு 367 கோ்டி ரூபாய்க்கு மேல் செலவாயிற்று.

∴ ∴ ∴

ஜம்மு – காஷ்மீர் எப்போதும் பாரதத்துடன் இருந்து வரும் என்றும், இந்த முடிவை எவராலும் மாற்ற முடியாது என்றும், காஷ்மீர் பிரதமர் பச்ஷி குலாம் முகம்மது கூறினர்.

∴ ∴ ∴

திபேத்திலிருந்து 127 முஸ்லிம் வியாபாரிகள் காஷ்மீர் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

∴ ∴ ∴

இன, மதப் பாகுபாட்டை அடிப்படையாகக்கொண்ட கட்சிகள் பொதுத்தேர்தலில் கலந்துகொள்வதைத் தடைசெய்ய வேண்டுமென 7 பேர் கொண்ட காங்கிரஸ் பாராளுமன்ற உப குழு சிபார்சுசெய்துள்ளது.

## தென்னுபிரிக்கா மீண்டும் சேர வழியுண்டு

லண்டன், மார்ச் 31

தென்னுபிரிக்கா, தன் இன வேற்றுமைக் கொள்கையைக் கைவிடத் தயாராய் இருக்கும் பட்சத்தில், மீண்டும் காமன் வெல்த்தில் சேர அதற்கு எப்போதும் வழிதிறந்திருக்கிறது என நியூஸிலந்து பிரதமர் கூறினர்.

## பொற்ருெழிலாளர் அளித்த பணமுடிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரித் தொண்டர்களால் திரு. வி. என். நவரத்தினம் எம். பி. தலைமையில் நடைபெற்ற மறியலின்போது அவிசாவளையைச் சேர்ந்த தமிழர்களும் யாழ்ப்பாணத்தில் வாழும் மட்டக்களப்பு பொற்ருெழிலாளர்களும் திரு. வி. ஏ. கந்தையா எம். பி. யிடம் பணமுடிப்புகளை வழங்கியதோடு மறியலிலும் கலந்து தமது ஆதரவையும் தெரிவித்துக்கொண்டனர்.

## மேயர் கொல்லப்பட்டதனுல் பலத்த காவல்

பாரிஸ், மார்ச் 31

பிரான்ஸுக்கும் அல்ஜீரிய தேசிய வாதிகளுக்குமிடையே நடைபெற்ற சமாதானப்பேச்சு வார்த்தையின் போது இரண்டு வெடிகுண்டுகள் வெடித்ததன் விளைவாய், நகரமேயர் பிளாங்க் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

## காணி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, திங்கள்

நாட்டிலுள்ள இளம் விவசாயிகள் சங்கங்களுக்குத் தலா 5 ஏக்கர் வீதம் காணி வழங்குவதெனக் காணி, விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

## ஊக்க வேலை ஊதியத் திட்டம்

கொழும்பு, திங்கள்

ஊக்கவேலை ஊதியத் திட்டமொன்று, கல்லோயாவில் அமுல் நடத்தப்படும். கரும்புச் சாகுபடி இத்திட்டத்தின் கீழ் வரும்.

## கல்வி டைரக்டர் சம்மதமின்றி ஆசிரியர் நியமனம் இல்லை

கொழும்பு திங்கள்—

கல்வி டைரக்டரின் அங்கீகாரமின்றி டைரக்டர் நிர்வகிக்கும் பாடசாலைகளில் எந்த ஆசிரியரையும் நியமிக்க முடியாது.

சகல கல்லூரி அதிபர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை இதை எடுத்துக் காட்டியுள்ளது.

பாடசாலை நிதியிலிருந்து அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்கும் தற்போதைய பழக்கத்தை நிறுத்துமாறு அதில் கோரப்பட்டுள்ளது.

## மீண்டும் கென்னடி–மாக் சந்திப்பு

லண்டன், மார்ச் 31

தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன், அடுத்த புதன்கிழமை, மீண்டும் ஜனுதிபதி கென்னடியை வாஷிங்டனில் சந்தித்து லாவோஸ் பற்றியும், இதர உலகப்பிரச்சினை பற்றியும் பேசுவார் என அறிவிக்கப்படுகிறது.

## உலக ஜனத்தொகை 300 கோடி!

நியூயோர்க், ஏப்ரல் 3

உலகின் ஜனத்தொகை இவ்வாண்டு 300 கோடிக்கு அதிகப்படியாய் இருப்பதாயும், வருடம் ஒன்றுக்கு 4 1/2கோடி முதல் 5 1/2 கோடி பேர் வரை ஜனப்பெருக்கம் அதிகரித்து வருவதாயும் ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

## ஆசிரியர் சங்கக் கூட்டம்

மட்டக்களப்பு, ஞாயிறு

"தற்போது வெளியாகியுள்ள சம்பளக் கமிஷன் அறிக்கை அமுலுக்கு வந்தாலும் வராவிட்டாலும் சுயபாஷா ஆசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர்களையும் ஒரே நிலையில் வைத்துச் சம்பளத் திட்டத்தை அது வகுத்துள்ளதின் மூலம் ஒரு சிறந்த சேவையைச் செய்துள்ளது. ஒரு தொழிலைச் செய்யும் ஆசிரியர்களிடையே மொழியினுல் பேதங் காட்டும் குடியேற்ற நாட்டு நடைமுறையை வில்மட் கமிஷன் மாற்றியிருப்பது வரவேற்கத் தக்கது என அக்கரைப்பற்றுத் தமிழ் ஆசிரிய சங்கத் தலைவர் திரு. எஸ். கே. தெய்வநாயகம் அக்கரைப்பற்று ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கக் காரியதரிசி திரு. எம். சிவநேசராசா, சங்கத் தலைவர் திரு. கே. எல். இராசேந்திரம், காரியதரிசி திரு. எஸ். குழந்தைவேல் ஆகியோரும் பேசினர்கள்,

தலைவராகத் திரு. எஸ். கே. தெய்வநாயகமும், காரியதரிசியாக திரு. வி. தம்பையா பிள்ளையும், தனுதிகாரியாக திரு. கே. ஜே. நாகமணியும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

---

மன்னரிலிருந்து 15 மைலுக்கப்பாலுள்ள மானங்கவெளி உழவர் ஒரு கோஷ்டியாக, இருபத்துநான்கு மணித்தியாலம் சத்தியாக்கிரகத்திலீடுபட்டனர்.

## மேதினத்தை சுதந்திரக்கட்சி தனியாகக் கொண்டாடும்

கொழும்பு

மே தினத்தைத் தனியாக சுதந்திர சதுக்கத்தில் கொண்டாட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின தொழிற் சங்கம் தீர்மானித்திருப்பதாக இக்கட்சியின் பிரதிநிதி டாக்டர் டபிள்யூ. டி. டி. சில்வா தெரிவித்திருக்கின்ருர்.

மற்றைய வர்த்தக சங்கங்கள் சில தீர்மானங்களைக் கொண்டுவர இருப்பதால், அரசாங்கம் குழப்பமடையா வண்ணம் தாங்கள் தனிமையாகவே மேதின விழாவைக் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றது.

மே தினத்தைத் தனியாகக் கொண்டாடினுலும் இவைகள் தொடர்ந்து தொழிற் சங்கங்களின் அங்கத்தவர்களாகத் இருப்பார்கள் என்றும் திரு. சில்வா கூறினர்.

## வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

பருத்தித்துறை, ஞாயிறு,

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியை அரசாங்கத்துக்கு கையளிக்க வேண்டும் எனக் கோரும் பிரேரணையொன்று இன்று நடைபெற்ற கல்லூரியின் வடமராட்சி சைவவித்தியாவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கடைசி நேரத்தில் வாபஸ் வாங்கப்பட்டது.

---

மாவிட்டபுரம் திங்கள்—

காங்கேசன் துறையைச் சேர்ந்த பயில்வான் திரு. த. இரத்தினசாமி தமிழுக்கு உரிமை கோரி சென்ற 23-ம் திகதி தொடக்கம் உண்ணுவிரதமனுட்டித்து வருகிருர்.

## திருமணம்

**மணமகன்:** திரு. இராஜ. அரியரத்தினம்
(ஆசிரியர்: 'ஈழநாடு')
காலஞ்சென்ற திரு. இராஜரத்தினம், திருமதி இராசம்மா இராஜரத்தினம், 'கலாநிதி', சாவகச்சேரி. ஆகியோரின் மகன்.

**மணமகள்:** செல்வி ராதா
(ஆசிரியை, H. F. கன்வன்ட், அநுராதபுரம்.)
திரு. எஸ். நடராஜா, ஜே. பி., யு. எம்., காலஞ்சென்ற திருமதி நடராஜா, 'பிருந்தாவனம்', அநுராதபுரம். ஆகியோரின் மகள்.

**திருமணம்:** 7-4-61 வெள்ளிக்கிழமை காலை.

**வரவேற்பு:** அன்று மாலை 5 மணியிலிருந்து 7-30 வரை கூழாவடி ஆனைக்கோட்டையிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்துக்கு அன்பர்களையும் உறவினரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

B. R. தேவராஜனும்
பாரியாரும்

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஷெல் நிரப்பு நிலையத்திற்கு ஒரு பம்பரும் (Pumper) களஞ்சியத்திற்கு ஒரு காவல்காரனும் தேவை. விரும்புவோர் தமது வயது, தராதரம், தேவைப்படும் சம்பளம் முதலிய விபரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 12-4-61க்கு முன் மனுச்செய்யவும்.

தலைவர்
தென்-யாழ்ப்பாணம்
ப. நோ. கூ. ச. சமாசம்,
Advt. 87 கிளிநொச்சி

### தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள **செல்காஸ் சேட் தொழில் நிலையத்துக்கு** சேட் தைப்பதில் அனுபவம் வாய்ந்த இளம் பெண்கள் தேவை. மெஷின் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு:
**செல்காஸ் சேட் தொழில் நிலையம்**
221, நாவலர் வீதி,
Advt. 88 யாழ்ப்பர்ணம்.

### புற்று நோய்
(Cancer)

பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட ஆயுள் வேத அரிய மருந்து **"யோகீஸ்வர ரசம்"** புற்றுநோயை வேரறுக்கும்.

பூரண சுகமடைந்த ஒருவரது சான்றிதழ்.

எனது மூத்த சகோதரி கெற்பப்பையில் புற்றுநோய் பீடிக்கப்பட்டு, கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 20 காந்த ஊசிகளும் ஏற்றப்படுத்தியதன் மேலும் சுகங்கிடையாமையினல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆயுள்வேத வைத்தியர் திரு. பொ. செல்லையாவின் **யோகீஸ்வர ரசம்** என்னும் அவுசதம் இருபது நாட்களுக்குச் சாப்பிட்டுப் பூரண சுகம் அடைந்தார்.

—க. பொன்னுத்துரை
அரசாங்க உத்தியோகத்தர்

விபரங்கட்கு
**பொ. செல்லையா**
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 75 கந்தர்மடம்.

### விற்பனைக்கு

15ஏக்கர் கொல்லனுறு வயல் இருகாலமும் விதைக்கக் கூடியது. பரந்தன் புகையிரத நிலையத்திலிருந்து 3 மைல் தூரத்தில் பூனகரி ரோட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள காணி விற்பனைக்கு இருக்கிறது.
விபரங்களுக்கு:
K. G. நல்லையா, ஸ்டேசன் மாஸ்டர், சாவகச்சேரி. அல்லது R. C. அமிர்தராஜா, 23, சாகரா ரோட், பம்பலப்பிட்டி. Advt. 90

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 58 யாழ்ப்பாணம்.

### காணி நிலம் தேவை

வடமாகாணத்தில் நன்செய் நிலம், தோட்டக்காணி, வயல், கலட்டி, காட்டுக்காணி விற்பனைக்கு இருப்பின கீழ்காணும் விலாசத்திற்கு பரப்பின் பெறுமதியைக் குறித்து அறிவிக்கவும்.

கிளைஸ்தாபன கந்தோர்
அண்டர்றைட்டர்ஸ் லிமி.,
23/3, ஸ்ரான்லி வீதி,
Advt.89 யாழ்ப்பாணம்.


# சத்தியாக்கிரக செய்திகள்

யாழ்ப்பாணம், திங்கள்
தமிழுரிமைப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமென்றும் அதற்கு இறைவன் அருள் புரியவேண்டுமென்றும்வேண்டி கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு. ஆ. விநாயகமூர்த்தி நல்லூரிலிருந்து அங்கப்பிரதிஷ்டை மூலம் கச்சேரியை வந்தடைந்து ஞாயிற்றுக்கிழமை சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார்.

∴ ∴ ∴

மன்னாரில் மூன்று லொறிகளில் வந்திறங்கிய சுமார் இருநூறு பேசாலைச்சத்தியாக்கிரகிகள் தேவமாதா கோவிலிலிருந்து திரு. எலியாஸ்பீரிஸ், திரு. குசைலம்பேர்ட், திரு. கே. எஸ். குரூஸ் தலைமையில் நீண்ட ஒரு மௌன ஊர்வலத்தை ஆரம்பித்தார்கள்.

∴ ∴ ∴

மயிலிட்டி, பருத்தித்துறை, மாரீசன்கூடல், பண்டத்தரிப்பு, பெரியவிளான், வடலியடைப்பு, தெல்லிப்பளை ஆகிய இடங்களிலுள்ள தொண்டர்களும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கச்சேரி வாயிலை நிரப்பினர்.

∴ ∴ ∴

பலப்பிட்டிக் கிராம முன்னேக்குச் சங்க மக்கள் திரு. கு. கணபதிப்பிள்ளை தலைமையில் வந்து தேவாரம், திருப்புகழ், பஜனை முதலியவற்றுடன் மறியலில் கலந்து கொண்டனர்.

∴ ∴ ∴

நீண்ட வெயிலையும் மழையையும் பாராது கறுப்பும் சிவப்புங்கொண்ட பதாதைகள் நடுவே பாரதக் கொடியும் காற்றிற் படபடக்க திரு. மு. ரா. செல்லமுத்துவின் தலைமையில் புறப்பட்ட சுமார் ஐம்பது தொண்டர்களின் சைக்கிள் ஊர்வலம் மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனிடம் பொற்காசு வழங்கியது. இருபத்து நாலு மணித்தியால சத்தியாக்கிரகத்தை உடனே ஆரம்பித்தனர்.

∴ ∴ ∴

இரண்டு கண்ணும் தெரியாத சுமார் எழுபது வயது மதிக்கக்கூடிய திரு. மனுவேற்பிள்ளை பாவிலுப்பிள்ளை சத்தியாக்கிரகத்திற் பங்கெடுத்துக் கொண்டார்.

∴ ∴ ∴

நிந்தாவூர்த் தொகுதி ஐ. எஸ். எம். காசிம் என்பவரும் மட்டக்களப்புக் காரைதீவைச் சேர்ந்த ஐ. செயினுதீன் என்ற முஸ்லிம வாலிபர் பன்னிரண்டு நாட் சத்தியாக்கிரகத்தைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

∴ ∴ ∴

95க்கு மேற்பட்ட லொறிகளும் டிராக்டர்களும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்களும் கொண்ட ஊர்வலம் (திரு. வி. ஏ. அழகக்கோன்) மன்னர் எம். பி. யிடம் ஒரு பணமுடிச்சைக் கொடுத்தது.

∴ ∴ ∴

இரு நாட்களாக மறியலியக்கத்திலீடுபட்ட 98 வயதான திருமதி லோறன்ஸ் செபமாலை கருங்கண்டலிருந்து மன்னார் கச்சேரி முன்றிலிற் சத்தியாக்கிரகம் செய்தார்.

∴ ∴ ∴

மட்டகலை எஸ்டேட்டைச் சேர்ந்த திரு. எஸ். சுந்தரமென்பவர் பதின்மூன்று நாட்களாகச் சத்தியாக்கிரகம் செய்கின்ருர்.

∴ ∴ ∴

கறுப்புத்துணியை வாயிற்கட்டிய வண்ணம்13 நாட்சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டுள்ள திரு. கே. எம். கே. சீனி என்பவர் மன்னர் பொலிஸ் நிலையப் பிரதான தெருவிலிருந்து கச்சேரிவரை அங்கப்பிரதிஷ்டை செய்து உருண்டு வந்த காட்சி உருக்கமாக இருந்தது.

∴ ∴ ∴

வேலணை மேற்கு வாசிகளால் சனியன்று சிப்பணை முருகமூர்த்தி கோவிலில் இருந்து 1500 உணவுப் பார்சல்கள் சத்தியாக்கிரகிகட்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## தெல்லிப்பளை கிராமச் சங்க தீர்மானம்

மாவிட்டபுரம், திங்கள்
தமிழ் மொழிக்கு உரிமை வழங்குமாறு பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று தெல்லிப்பளை கிராமச் சங்க மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது. திரு. கு. கதிரையாண்டி தலைமையில் சனிக்கிழமை நடந்த இக்கூட்டத்தில், கிராமச் சங்க வருமானத்திலிருந்து ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## காங்கேசன்துறை சத்தியாக்கிரக நிலைமை

மாவிட்டபுரம், திங்கள்
காங்கேசன் துறையில் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி இன்றுடன் ஒரு வாரம் பூர்த்தி அடைகின்றது. வெள்ளிக்கிழமை நண்பகல் இரண்டு மணி நேரம் மழை பெய்த போதிலும் தொண்டர்கள் இடம்விட்டு நகரவில்லை. காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலை பொழுது போக்கு விடுதியின் முன்பாகவும், உணவு விற்பனை இலாகா முன்பும் சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது.

யாழ்ப்பாண மாவட்டச் சுகாதார அதிபரின் பங்கீட்டரிசி சம்பந்தமான வேண்டுகோளை ஆஸ்பத்திரித் தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர்.

## தமிழ் மொழி பாதுகாப்பு அபிஷேகம்

மாவிட்டபுரம், சனி
கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் "தமிழ் மொழிப் பாதுகாப்பு" அபிஷேகம் நடத்தப்பட்டது.

மன்னர்
# சத்தியாக்கிரகிகளுக்கு யாழ்ப்பாணம் அன்பளிப்பு
## முஸ்லிம் மக்களும் கலந்துகொள்கின்றனர்

மன்னர், திங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து மன்னருக்கு வந்திருந்த ஏராளமான வாழைக்குலைகளும் இலைகளும் சில மரக்கறி வகைகளும் திரு. வி. ஏ. அழகக்கோன் எம். பி. யிடம் அளிக்கப்பட்டன. யாழ்ப்பாண மக்களுக்கு மன்னர்ச் சத்தியாக்கிரகிகள் சார்பில் பதினைந்து மூடை அரிசி, நெல், எலுமிச்சம் பழங்கள் முதலியவை லொறியில் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்பட்டன.

இயேசுநாதருடைய உயிர்த்தெழுந்த திருநாளைக் கொண்டாடுமுகமாக கோயில்களை மக்கள் நிரப்பிக்கொண்டிருந்ததால் சத்தியாக்கிரகிகளின் எண்ணிக்கை காலையில் குறைவாகக் காணப்பட்டது. எனினும் சிறிது நேரத்தின் பின் மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

மன்னர் பட்டின முஸ்லிம்கள் மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டதைத் தொடர்ந்து முஸ்லிம் கிராமமாகிய தாராக்குண்டிலிருந்தும் பெருந்திரளான முஸ்லிம் மக்கள் மறியலியக்கத்தில் கலந்துகொண்டனர்.

மறியலில் கலக்கு முன்னர் ஊர்வலமாக வந்த முஸ்லிம் மக்கள் இளம் பிறைக்கொடி தாங்கி இஸ்லாமிய சமய கோஷங்களைக் கோஷித்த வண்ணம் மறியலில் கலந்து கொண்ட காட்சிவெகு உருக்கமாக அமைந்திருந்தது. இதைத் தொடர்ந்து மாவட்டத்திலுள்ள மற்ற முஸ்லிம் கிராமங்களில் வதியும் முஸ்லிம் மக்களும் கோஷ்டி கோஷ்டியாக கலந்துகொள்ள நடவடிக்கை எடுத்துவருகின்றனர். தாராக்குண்டு முஸ்லிம் பொதுமக்கள் சார்பில் கிராமச் சங்கத் தலைவரும் ஜனுப்கள் எம். யூ. நயினு, கே. டீ. சமது முதலியோர் தலைமை தாங்கினர். பணமுடிப்பொன்று மன்னர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனிடம் வழங்கப்பட்டது.

தலைமன்னர் சத்தியாக்கிரகிகள், ஆடவர் சங்கம் மாதர் சங்கங்களைக் கொண்ட ஓர் நீண்ட ஓர் ஊர்வலமாக மறியலியக்கத்தில் கலந்துகொண்டனர்.

மறியலில் கலக்கு முன்னர் அமைதியான முறையில் கறுத்தக்கொடிகளைத் தாங்கிய வண்ணம் கச்சேரி வாசற்பகுதிகளை நிரப்பினர். தலைமன்னர் மாதர் சங்கத்தின் சார்பில் திருமதி அருளப்பு கூஞ்ஞை தலைமை தாங்கி மறியலில் கலந்துகொண்டார். ஆயிரக்கணக்கான மக்கள் இன்று சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

## கல்வி மந்திரிக்கு கடிதம்

மட்டக்களப்பு, செவ்வாய்
அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கக் காரியதரிசி கல்வி மந்திரிக்கும், வித்தியாபதிக்கும் அனுப்பிய கடிதத்தில் வடமாகாண ஆசிரியர்களின் சம்பளத்தை இந்து புது வருடப்பிறப்பின் முன் கொடுக்குமாறு கேட்டுள்ளனர்.




## ஹான்ட்லூம்ஸ்
ஸ்தாபனத்தின்
### 7வது ஆண்டுவிழா
சித்திரை மாதம் 3ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை

எங்கள் கொண்டாட்டத்தை வாடிக்கைக்காரர்களுடன் பங்குபற்று முகமாக, குறிப்பிட்ட நாட்களுக்குள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் 5ந்து வீத கழிவு கொடுக்க முன்வந்துள்ளோம்.

அநேக அதி உன்னத ரகங்களிலுள்ள சேலைகள், உடுப்பு ஜவுளிகள், திரைச்சீலைகள், கம்பளங்கள், படுக்கை விரிப்புகள், ஷேர்ட்டிங் துணிகள், சாரங்கள் ஆகியனவற்றில், விரும்பியதை, தேர்ந்தெடுங்கள்.

குறிப்பு: வாடிக்கைக்காரரின் வசதியை முன்னிட்டு இவ்ஸ்தாபனம் ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்.

## ஹான்ட்லூம்ஸ்
(இந்திய அரசாங்கம்)
7, செட்டித் தெரு, கொழும்பு.
கிளை. "அன்னை மாளிகை" பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்; காலை 7, பகல் 12. 45, மாலை 6, இரவு 9)

**செவ்வாய் 4-4-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரை இசை 8-00 வயலின் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-45 சிங்களம் மூலம் தமிழ்—2 6-15 கிராமசஞ்சிகை 6-45 வாத்திய இசை.

இரவு 7-00 மெல்லிசை 7-30 என். மாணிக்க இடைக்காடர்—பேச்சு 7-45 ஆகாசவாணி அஞ்சல் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய கீதங்கள் 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-30 சி. பி. வேதவியாசராவ்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 கதம்பம் 2-30 சி. பி. வேதவியாசராவ்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 எச். ராமச்சந்திர சாஸ்திரி—புல்லாங்குழல் 9-15 'தபால்கார தங்கசுவாமி'—நாடகம் 9-30 நாட்டுப்பாடல்கள் 9-50 ஒலி ஏடு—சஞ்சிகை நிகழ்ச்சி.

---

## காரியதரிசி ராஜினமா

பருத்தித்துறை, ஞாயிறு வடமராட்சிப் பகுதி கைப்பந்தாட்டச் சங்கங்களின் சமாஜத்தின் செயலாளர் திரு. வி. தங்கராசா தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

# 'பழந்தமிழர் வாழ்க்கையை மேற்கொள்ள'வேண்டும்'

## தமிழ்ப்பேசும் மக்களுக்கு உடுப்பிட்டி எம். பி. யோசனை

"இன்றைய சத்தியாக்கிரகப்வாழ்வது நமக்கெல்லாம் வழி போராட்டம் எவ்வளவு காலம் தொடர்ந்து நீடிக்குமென்பது கூறமுடியாது. எனவே, பழந்தமிழ் நாட்டில் நமது மூதாதையர் போல சிறந்த சத்துள்ள பொருட்களான குரக்கன், சாமை, தினை, எள்ளு முதலிய தானியங்களை நாம் பயிரிட வேண்டியது அத்தியாவசியமாகிவிட்டது".

இவ்வாறு இன்றைய நிலைமை, எதிர்காலம் தமிழர் பொருளாதாரம் முதலியனவற்றைப் பற்றி உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினர். அவர் மேலும் கூறுவதாவது:-

சிறந்த பொருளாதாரம் இருந்தால் தான், சிறந்த மொழி, கலாசாரம் இவற்றைக் கட்டியெழுப்ப, முடியுமென்று 'பொருள்முதல் வாதிகள்' கூறுவதை நான் மறுக்கிறேன். கூழ் உண்டு கவிபாடினள் ஒளவை. உடையின்றித் தவித்த புலவன் பாடிய கவிதையை சிறந்த இலக்கியமென்று போற்றுகிறோம். அன்ன சத்திரங்களில் வாழ்ந்த காளமேகம் நெஞ்சையள்ளும் வசைக் கவிகளைப் பாடினன். துறவுபூண்டு, எளிய வாழ்வு வாழ்ந்த இளங்கோவடிகள் ஈந்த சிலம்பு நமது பண்பாட்டின் அணிகலமல்லவா?"

"இலங்கையிலும் சிறிய நாடுகளான இஸ்ரேல், சுவிற்சர்லாந்து, கியூபா போன்ற நாடுகளிலுள்ள மக்கள் இன்று உயர்ந்த பண்பட்ட வாழ்வு காட்டாக அமைய வேண்டும். தமிழன் என்ருேர் இனமுண்டு என்பதை முதலில் தமிழரே நன்கு உணர வேண்டும்".

---

## "புதுவருடத்தை கொண்டாடவேண்டாம்"

### பண்டிதர் சங்கம் கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள் "தமிழ் மொழியும், தமிழ் மக்களும் நெருக்கடியான கட்டத்தில் வாழும் இன்றைய நிலையில் புத்தாண்டைக் கொண்டாடுவது வெறுங் கேலிக் கூத்தாகும்" இவ்வாறு அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்கச் செயற்குழு முன்தினம் கரவெட்டி சரஸ்வதி வித்யாலய மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தது.

இம்மாதம் 30-ம் திகதி பண்டித பட்டதாரிகள் சங்கத்தின் ஆண்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதென்றும், அக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தை ஒரு தொழிற்சங்கமாகப் பதிவு செய்வது பற்றி ஆலோசிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

மேலும், சங்க ஆதரவில் கதிரைமலைப் பள்ளு நாடகத்தை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடாத்தி, அதன் மூலம் வசூலிக்கப்படும் பணத்தை சத்தியாக்கிரக இயக்கத்துக்கு கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

## அநுராதபுரத்தில் சமசமாஜ மகாநாடு

சமசமாஜ வாலிபர் சம்மேளன 9-வது மகாநாடு கடந்த 1-ம் திகதி காலை ஆரம்பமானது. அதிகாலையில் ஐயாயிரத்துக்கு அதிகமான வாலிபர்கள் அநுரதபுரி பழைய நகரத்தில் உள்ள சுவர்ணமாலியிலிருந்து புதிய நகரத்தில் இருக்கும் ஹரிச்சந்திர சிலைக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் காடுகள் வெட்டி முப்பது அடி அகலமான ஒரு பெருந் தெரு அமைத்தனர்.

ஹரிச்சந்திர மைதானத்தில் ஐந்நூற்றுக்கதிகமான கூடாரங்கள் வாலிப சங்கங்களினல் அமைக்கப்பட்டிருந்தன. பிற்பகல் 3 மணிக்கு அநுரதபுரி அரசினர் மத்திய கல்லூரியில் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

செனட்டர் சந்திரா குணசேகரா தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். எம். பெரரா, அனில் முனசிங்க, கொல்வின் ஆர். டி. சில்வா திரு. தென்னக்கோன், எட்மண்ட் சமரக்கொடு ஆகியோர் பேசினர். தோழியர்கள், விவியன் குணவர்த்தன, சோமா விக்கிரமநாயக்கா ஆகியோரும் பேசினர்.

---

## தற்கொலை

வரணி, சனி வரணிக் கிராமச் சங்கத்தின் முன்னள் தலைவரின் சகோதரர் செல்லையா துரையப்பா நஞ்சுண்டு மரணமானர். மரண விசாரணையின் பின் தற்கொலையென அறிவிக்கப்பட்டது.

## வவனியாவில் சத்தியாக்கிரகநிலை

### ஸ்தல எம். பி. தலைமையில் நடந்தது

வவனியா, திங்கள் இன்றைய 13-வது நாள் சத்தியாக்கிரகம் வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் ஸ்ரீமதிசிவசிதம்பரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. முள்ளியவளை கிராமச் சங்க முகாமையிலிருந்து அநேக லொறிகளைக்கொண்ட மாபெரும் ஊர்வலம் நேற்றுநள்ளிரவு வவுனியா வந்து சேர்ந்தது. இந்த ஊர்வலத்துற்கு திரு. அண்ணமலை திருமதி அண்ணமலை ஆகியோர் தலைமை வகித்தனர். தினமும் சத்தியாக்கிரகிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. கார்ச்சாரதிகள் சங்கத்தின் சார்பாக 50 கார்கள் நேற்றுமாலை ஊர்வலத்தில் கலந்துகொண்டன. சங்கத்தலைவர் திரு. பண்டா வவுனியா எம். பி. யிடம் பணமுடிப்பொன்றை அளித்தார். இன்று யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 100 மாணவர்கள் வவுனியா வந்து மறியல் செய்கிருர்கள்.

---

## இளைஞர் விவசாயக் கழகங்களுக்கு நிலம்

கொழும்பு ஏப்-2, நாடு முழுதும் உள்ள இளம் விவசாயிகள் கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஐந் தேக்கர் நிலம் வழங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது,

கல்லோயாப் பள்ளத்தாக்கில் உப உணவு உற்பத்தித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள குடியேற்ற வாசிகளுக்கு ஊக்கமளிக்கும் திட்டமொன்றை அரசாங்கம் அமுல்நடத்த விருக்கிறது.


ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனல் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.
ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.
........எனவே
பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.........
ஆனல் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......
ஏன்?
எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?
பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......
புதுமை விரும்பிகள்

எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்
ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா
நடித்த



அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்ஷன்: CH. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
கதை, வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டுடியோ: நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18. லஸ் அவன்யூ, மதருஸ்.4

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோகரா (யாழ்ப்பாணம்)
பதிபக்தி
சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, தங்கவேலு நடித்தது.
மாலை 6-30 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30 மெற்னி

## தோட்டத் துரைக்கு பிரிவுபசாரம்

எட்டியாந்தோட்டை சனி

"குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை இவைகள் நமக்களிக்கப்படவில்லை; எனினும், நாம் வேலையின்றி சும்மா இருந்து விட முடியாது. அந்த உரிமைகளுக்காக வாதாடிக் கொண்டே, நாட்டின் முன்னேற்றத்திலும் பல் வேறு பகுதிகளில் நடை பெற்று வரும் பெரும் போராட்டங்களிலும் அக்கறையும் கவலையுமிக்கவர்களாக இருந்து வர வேண்டும்" என தெரணியகலையைச் சேர்ந்த உடப்பொல குரூப்பின் தலைமைத் துரை திரு. பெயின் தம்பதிகளுக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசாரக் கூட்டத்தில் திரு. டி. எம். பீர்முகமது கூறினர். ஆங்கிலத்திலும் தமிழிலும் பாராட்டிதழ் தொழிலாளர்களால் படித்தளிக்கப்பட்டது. ஜில்லப்பிரதிநிதி திரு. பத்திரட்னவும் சொற்பொழிவாற்றினர். தோட்டத் துரை திரு. பெயின் நன்றியுரை கூறினர்.

தோட்டக் குழந்தைகள் முன்னேற்றத்துக்காக துரை நூறு ரூபாய் அன்பளிப்பாக தோட்டத் தலைவரிடம் அளித்தார்.

---

## தொழில் அதிகாரி ஓய்வு பெறுவார்

கொழும்பு, திங்கள்

சீனியர் உதவித்தொழிற்கமிஷனர் திரு. வி. கார்த்திகேசன் ஓய்வுபெற விரும்புவதாய் அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளார்.

---

## வர்த்தக அமைச்சுக்கு முறையீடு

கொழும்பு, திங்கள்

கைக்கடிகார இறக்குமதிக்கு தற்போதிருந்துவரும்தடையை நீக்காவிடில், 2500 ஊழியர்களை வேலைநீக்கம் செய்யவேண்டிவருமென இறக்குமதியாளர்கள் வர்த்தக அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

---

## தினசரி ஆராதனை

மட்டக்களப்பு, செவ்வாய்

இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபை மதகுரு வண. இராமநாதன் மட்டக்களப்பில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த நாள் முதல் தினமும் ஆராதனை நடத்தி வருகிறார். அவ்வாராதனை முடிவில் கிடைக்கும் காணிக்கையைச் சத்தியாக்கிரக நிதிக்கு வழங்கி வருகிறார்.

---

## ரெயில் நேரங்கள்

| யாழ்ப்பாணம் | - கோட்டை |
|---|---|
| காலை 5.40+ | - பி.ப 1.20 |
| காலை 7.25 | - மாலை 7.15 |
| பி.ப 2.26 | - இரவு 10.05 |
| மாலை 6.36 | - காலை 5.15 |
| மாலை 8.52* | - காலை 6.15 |
| கோட்டை | - யாழ்ப்பாணம் |
| காலை 6.00 | - பி.ப 1.23 |
| காலை 6.45 | - மாலை 5.55 |
| பி.ப 2.15 | - இரவு 9.52 |
| மாலை 7.15 | - காலை 5.05 |

+ ஞாயிறு இல்லை

* ஞாயிறு மட்டும்

# வாக்குறுதியை அரசாங்கம் மறந்துவிட்டது

## மாணவர்மன்றம் கவலை

"ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியிலிருந்தும் இரண்டு ஆசிரியரையும், இரண்டு ஆசிரியரல்லாதோரையும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தேர்ந்தெடுப்பதாக அரசாங்கம் பிரகடனப்படுத்திய வாக்குறுதி இவ்வாண்டும் கைவிடப்பட்டுவிட்டது. இம்முறையும் சேவையிலிருக்கும் ஆசிரியர் மட்டுமே பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இரவு பகல் தூக்கமின்றிச் செலவு செய்து படித்த ஆசிரியரல்லாதோர் ஏமாற்றப்பட்டுள்ளனர். இதை உடனடியாகப் பரிசீலனை செய்யவேண்டியது கல்வி அமைச்சின் பொறுப்பாகும்".

இவ்வாறு கரவெட்டி வாணி கலைக்கழக மாணவர் மன்றத்தினர் கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளனர்.

அவர்கள் கூறியதாவது:—

"ஒருவர் சேவையிலிருந்தாலென்ன, இல்லாவிடிலென்ன திறமை என்ற அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு மாணவரைத் தெரிவு செய்யும் முறையே சிறந்ததும், ஜனநாயகத்துக்குப் பொருத்தமானதுமாகும். இம் முறையைக் கடைப்பிடித்தால் படித்த வாலிபருக்கிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதுடன் நாட்டின் பொருளாதாரச் சீர் கேடுகளை ஒழித்துக் கட்டவும் வழி பிறக்கும்".

---

## வகுப்புவாதப் பெயருள்ள கட்சிகள்

### தேர்தலில் தடைவிதிக்க யோசனை

புதுடில்லி, ஏப். 2

வகுப்புவாத, மதப் பெயருடைய கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுவதிலிருந்து தடைசெய்யப்படவேண்டும் என்று சிபார்சு செய்வதென பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சியின் ஏழுபேர் கொண்ட உபகுழு முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தலில் வகுப்புவாதக் கட்சிகள் போட்டியிடுவதற்குத் தடைவிதிக்கும் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்காக ஸ்ரீ அஜீத் பிரசாத் ஜெயின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

வகுப்புவாத பெயர்கள் இல்லாத போதும் வகுப்புவாத அடிப்படையில் நடவடிக்கைகள் அமைந்துள்ள கட்சிகளின் நிலை பற்றியும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சட்ட மந்திரியுடன் ஆலோசனை கலந்து இதுவிஷயம் மேலும் பரிசீலிக்கப்படும் என்று தெரிகிறது.

---

## பூமிதானத்தில் புதிய முயற்சி

இந்தூர், ஏப். 1

சாகுபடிக்கேற்ற நிலங்களை மட்டுமே இனி பூமிதானமேற்பதென அகில இந்திய சர்வ சேவா சங்கம் தீர்மானித்திருக்கிறது.

சங்கத்தின் தலைவர் ஸ்ரீ சித்ராஜ் தண்டா இன்று இத்தகவலை பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். இந்த நிலங்களை நிலமற்ற விவசாயிகளிடையே விநியோகிக்க தானம் கொடுப்பவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## "பலாத்காரத்தால் போராட்டத்தை நிறுத்தமுடியாது"

### கோப்பாய் எம். பி.

கோப்பாய், திங்கள்

"சத்தியாக்கிரகம் நடைபெற்றுக்கொண்டிருப்பினும் தமிழ்ப்பேசும் மக்களுடைய இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற பிரதமர் நடவடிக்கை எடுப்பாரானல் இப்பொழுதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கஷ்டமிராதென நம்புகிறேன்".

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாயில் தொண்டர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கடந்த காலங்களில் பாராளுமன்றத்துக்குள்ளும் புறமும் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளால் ஒரு பயனும் ஏற்படவில்லை. கோட்டு மொழிமசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது கொண்டுவரப்பட்ட திருத்தப்பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் பலரும் ஆதரவு கொடுத்திருந்த போதிலும் அரசாங்கக் கட்சியினரில் பலரும் அதற்கு மாறுக இல்லாதபோதிலும் நீதிமந்திரியும் நிதிமந்திரியும் அதனை முற்ருக நிராகரித்துவிட்டனர் என்றார்.

தமிழ்பேசும் மக்களுடைய ஏகோபித்த உரிமைப்போராட்டத்தை தந்திரத்தாலோ பலாத்காரத்தாலோ ஒருபோதும் தட்டிக்கழிக்க முடியாது. இந்நிலைமையை இதுவரையில் பிரதமர் உணர்ந்திருக்கவேண்டும். அப்படியிருந்தும் தமிழருடைய உரிமைக்குரலுக்குச் செவிசாய்க்காது தம்கட்சியிலுள்ள ஒரு சில அரசியல் வாதிகளுக்காக தமிழ்ப்பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் உரிமைகளை அழிப்பது இந்த அரசாங்கத்துக்கோ நாட்டுக்கோ நன்மையல்ல என்று அவர் மேலும் கூறினர்.

---

## திரு. தேவராஜன்

யாழ்ப்பாணம், செவ்வாய்

செம்மணி உப்பளத்திட்டத்தை விருத்தி செய்யும் நோக்கமாக உப்பள ஆணையாளர் டி. பி. தேவராஜன் இம்மாதம் முதற்கிழமையில் இங்கு வர இருக்கின்றார்.

---

## கவர்னர் ஜெனரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம மந்திரி, மகாதேசாதிபதியுடனும் வடக்கு, கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

பொதுஜன பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்வது பற்றிய சட்ட நுணுக்கங்கள் பற்றி பிரதமர் தமது அதிகாரிகளுடனும், மந்திரிகளுடனும் ஆலோசனைகள் நடத்தியிருப்பதாகத் தெரிகிறது.

நாளை நடக்கும் அரசாங்க பார்லிமெண்ட் குழு கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் அரிசிப்பங்கீடு செய்வதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்வதுபற்றியும் முடிவு செய்யப்படலாம் என்று தெரிகிறது.

## இராணுவத்தினரின் தாக்குதல்

### விசாரணை செய்ய கேணல் உடுகமை வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ்

ஞாயிற்றுக்கிழமை இரவு பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதியில் கோப்பாய், கல்வியங்காடு ஆகிய இடங்களில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான மூவர் பற்றி வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கமும் கோப்பாய் எம். பி. திரு. பாலசுந்தரமும் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ தளபதி கேணல் உடுகமையிடம் புகார் செய்தனர்.

இவ்விஷயம் பற்றி விசாரணை நடத்துவதாகவும் இன்று காலை 8-30 மணிக்கு தம்மை சந்திக்குமாறும் கேணல் உடுகமை இரு எம். பிக்களிடமும் தெரிவித்துள்ளார்.

---

## காங்கேசன்துறையில் அரிசி வாங்க மறுப்பு

மாவிட்டபுரம், திங்கள்

வடபகுதி தற்காலிக அரசாங்க அதிபர் காங்கேசன் துறை பகுதியில் அரிசிவிநியோகம் செய்ய எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் வெற்றி யளிக்கவில்லையென்று தெரிகிறது.

காங்கேசன் துறையில் தாம் தங்கியிருக்கும் வாசஸ்தலத்தில் வந்து அரிசிபெற்றுக் கொள்ளும்படி காங்கேசன் துறைப் பகுதியிலுள்ள பண்டக சாலைகளை அரசாங்க அதிபர் கேட்டிருந்தார். ஆனல், பண்டகசாலை நிர்வாகிகள், அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குச் சென்று அரிசி பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

---

## ரூபாய் 665 பணமுடிப்பு வழங்கினர்

யாழ்ப்பாணம், செவ்

வடமராட்சிப் பகுதியில் பங்கீட்டரிசிக்குப் பொறுப்புள்ள சங்கத்தின் பிரதிநிதிகள் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. தலைமையில் ஊர்வலமாகவந்து திரு. வி. தர்மலிங்கம் எம். பி. யிடம் ரூபாய் 655 கொண்ட ஓர் பணமுடிப்பை வழங்கி மறியலில் கலந்துகொண்டனர்.

மல்லாகம் கிராம மக்களும் திரு. செல்வநாயகத்திடம் ஓர் பணமுடிப்பையும் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் திரு. அமிர்தலிங்கத்திடம் இன்னேர் பணமுடிப்பையும் வழங்கினர்.

## மே. ஜெர்மன் பார்லிமெண்ட் கோஷ்டி

கொழும்பு, திங்கள்

ஆறுபேர் கொண்ட மேற்கு ஜெர்மன் பார்லிமெண்ட் அங்கத்தவர் கோஷ்டியொன்று புதன்கிழமை இலங்கை வருகிறது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றியும், மேற்கு ஜெர்மன் உதவியின்கீழ் நடைபெறும் தொழில் திட்டங்கள் பற்றியும் இக்கோஷ்டி பரிசீலனை செய்யும் என்று தெரிகிறது.

---

## மாற்றம் எதுவும் இல்லை

### அரசாங்கம் அறிக்கை

கொழும்பு, திங்கள்

பாதுகாப்புஅமைச்சும், உள்நாட்டு அமைச்சும் நேற்று கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னர், வவுனியா ஆகிய இடங்களின் நிலைமையில் மாற்றமெதுவுமில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

உரும்பராய் ஞானவைரவர் கோயிலில் தமிழ் உரிமைப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென்று கோரி நாளை 5ந் திகதி கூட்டுப்பிரார்த்தனை நடைபெறவிருக்கிறது.

---

## மறியல் இயக்கத்தில் இளைஞர் விவசாய சங்கம்

உடுப்பிட்டி, திங்கள்

நேற்று முன்தினம் திரு. எஸ். விக்னேஸ்வரன் தலைமையில் நடந்த கரவெட்டி மேற்கு இளம் விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றவேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## கதம்ப நிகழ்ச்சிகள்

வேலணை, செவ்வாய்

வேலணை மத்திய கல்லூரி மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் திரு. வே. தம்பு தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தின் முடிவில் அ. இ. சமயபாடப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் அதிபரால் வழங்கப்பட்டன.

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதீ அன் கோ.
குருதெனிய.
Advt 85

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.